முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1012

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.07.2022, வியாழக்கிழமை

1. கருணைக்கடலே அரங்கா போற்றி
   கலியுகம் காக்க வந்த தேசிகா போற்றி
   ஆறுமுகனார் என் சக்தியாகவே
   ஆற்றலாக வந்த அரங்கனே போற்றி போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும்
   இனிதே புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஆனி மாதம் 23 நாள், 07.07.2022 வியாழக்கிழமை)
   ஆற்றல்பட அரங்கன் சக்தி பெருக
   அனுதினம் ஆறுமுகன் யான் வரம் தந்து வர
3. வருகவே அரங்கனின் தர்மமும் கொள்கையும்
   வையகத்தை காப்பதும் மீட்பதும் உறுதிஉறுதி
   உறுதிகொண்டு அரங்கன் பெயரில் உயர் தர்மம்
   உலகமெல்லாம் தடையற பரவி வர
4. வருமுலகில் உலக மாற்றம்
   வள்ளல் தன்மையாக சடுதி காணநேரும்
   நேர்மைகொண்டு அரங்கன் தொண்டர்படைகளை
   நிலவுலகமெங்கம் அரங்கன் அமைத்துவர
5. வருமுலகில் அரங்கன் தொண்டுமூலமே
   வையகம் பெருமாற்றம் காணும்
   காணவே அற்புத ஞானத்தை
   கலியுகத்தில் அரங்கன் பால் கந்தவேலன் விட்டுள்ள
6. கோலமதாய் உலகோர் இணைந்து வந்து இனிதே
   குறையில்லா அரங்கன் வழி தொண்டு செய்து
   செய்துமே அரங்கன்பால் தீட்சை ஏற்று
   செப்பிடுவேன் தொடர் பூஜைகள் செய்துவர
7. வரங்களென அவர்களுக்கெல்லாம் ஞான பலம் கூடி
   வையகத்தில் ஞானிகளாக வாழ்ந்து உலகோர்
   உலகோர் ஞான ஆட்சித் தரக்கூடும்
   உயர்வுபட இந்த மாற்றம் நடக்க
8. தயவாக அரங்கன் வழி தரணியோர்வர
   ஆறுமுகன் என் அருட்தயவு கூடி உலகோர் மேல்நிலை காணக்கூடும்
   கூடவே அரங்கனை நோக்கி வாரீர் குவலயமே மாற்றம் கண்டு
   ஞானவான்கள் ஆட்சியும் ஞானசித்தர் காலமும் இனிதே கனியக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–